பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper Sri inLanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 10 வெள்ளிக்கிழமை 23-03-2001 தொலைபேசி: 3378 ஒலி: 94

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1621)

## ★ சமாதான முயற்சிக்கு ஏதுவாக எச்சரிக்கையுடன் கூடிய யுத்த நிறுத்தம்; விடுதலைப் புலிகள்

# நான்காவதுதடவையாகநீடித்தனர்

### அரசு தாக்குதல் நடத்தினால் யுத்த நிறுத்தம் இரத்தாகும்!

(வவுனியாவிலிருந்து நமது நிருபர்)

**இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சு வார்த்தைக்கு வழிவகுக்கும் வகையில் நான்காவது தடவையாக தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசுக்கு எச்சரிக்கையுடன் கூடிய ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த நீடிப்பு ஒன்றை நேற்று அறிவித்துள்ளனர்.**

எச்சரிக்கையுடன் கூடிய இந்த யுத்தநிறுத்த நீடிப்பு மார்ச் மாதம் 24-ம் திகதி நள்ளிரவு 12-00 மணியிலிருந்து ஏப்ரல் மாதம் 24-ம் திகதி நள்ளிரவு 12-00 மணி வரை அமுலில் இருக்குமென விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நல்லெண்ணத்துடன் கூடிய சமாதான முயற்சியை அரசு உதாசீனம் செய்து சிங்கள ஆயுதப் படையினர் போர் நடவடிக்கைகளையும் குண்டுத் தாக்குதல்களையும் தீவிரப்படுத்தினால் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை ரத்துச்செய்ய நேரிடுமெனவும் புலிகள் எச்சரித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் ஒரு மாத கால யுத்த நிறுத்த நீடிப்பு சம்மந்தமான அறிவிப்பை வன்னியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்துள்ளது.

அந்த உத்தியோக பூர்வ அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

### ஜனாதிபதி நேற்று நாடு திரும்பினார்

[கொழும்பு]

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனதுஐரோப்பியநாடுகளின் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கெண்டு நேற்று மாலை கொழும்புவந்து சேர்ந்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், தகவல் துணைப்பணிப்பாளர் ஆரியரூபசிங்க ஆகியோரும் லண்டனிலிருந்து வந்து சேர்ந்துள்ளனர். [வ]

### மாணவிகள் மீது அதிபர் பாலியல் வல்லுறவு

(கொழும்பு)

ஐந்தாம்வகுப்பு மாணவிகள் ஐவரை பாலியல்வல்லுறவுக்குட்படுத்தியபாடசாலைஅதிபர்ஒருவர பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் இச்சம்பவம் மாத்தறைஅக்குரஸ்ஸஊறுமுத்தகிராமப்பாடசாலையொன்றில்நிகழ்ந்துள்ளது.

→ 8ஆம் பக்கம் பார்க்க

### சமாதான முயற்சிகளில் நாம் அக்கறை கொண்டுள்ளோம்

ஸ்ரீலங்காவின் ஆயுதப்படைகளின் ஆத்திர மூட்டும் நடவடிக்கைகளின் மத்தியிலும், சந்திரிகா அரசின் கேலித்தனமான கூத்துக்களின் மத்தியிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த மூன்று மாதகாலமாக மிகவும் கட்டுப்பாடான முறையில் போர் நிறுத்தத்தைப் பேணி வருகிறது.

சமாதான முயற்சியில் நாம் அக்கறை உடையவர்கள் என்பதை சிங்கள அரசிற்கும் உலகத்திற்கும் உணர்த்தும் நோக்குடன் மாதாந்த அடிப்படையில் போர்நிறுத்தத்தை நீடித்து வருகிறோம்.

அத்தோடு எமது நல்லெண்ண முயற்சிக்கு ஆக்கபூர்வமான பதிலளிக்குமாறும் நாம்சிங்கள அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

ஆனால் சந்திரிகாவின் அரசாங்கம் எமது சமாதான முன்னெடுப்பை அரசியல் ஏமாற்றுவித்தையென நிராகரித்து வருகிறது.

நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு மேலும்காலஅவகாசம் வழங்கி சமாதானத்துக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும்நோக்குடனேயே தமிழீழவிடுதலைப் புலிகள் தலைமைப்பீடம் மேலும் ஒருமாதகாலத்திற்குப் போர் நிறுத்தத்தை நீடிப்பதற்கு முடிவுசெய்திருக்கிறது.

சமாதானம்பிறந்து இயல்பு நிலைதோன்றி சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பேச்சுக்கள்நிகழ வேண்டுமென்றால் எமதுமக்களின் ஏகோபித்த அபிலாசைகளை கருத்திற்கொண்டு நாம் மேலும் போருக்கு ஓய்வுகொடுக்க தீர்மானித்துள்ளோம்.

### சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பேச்சு நடைபெற வேண்டும்

எமதுசமாதான முன்னெடுப்பிற்குப்பிறகு சந்திரிக்காஅரசாங்கம் இதுவரையும் சாதகமானமுறையில்பதிலளிக்காது தட்டிக்கழிப்பதுடன் எமது இராணுவ பலவீனத்தை மூடிமறைப்பதற்கு நாம் மேற்கொண்ட அரசியல் தந்திரமென்று எமது முயற்சியை வர்ணித்திருப்பது எமக்குக் கவலையைத் தருகிறது.

### யுத்தநிறுத்த காலத்தில் 133 போராளிகள் வீரமரணம்

எமது ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தையும், தற்காப்பு போர் உத்திகளையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, சிங்கள ஆதிக்கப் படைகள் எமது போராளிகள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

வலிந்த தாக்குதல் - ஒழிந்திருந்து தாக்குதல், விமானக்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்புக்கு தூதுவர் எரிக்சோல் வரவேற்பு!

### சமாதானப்பேச்சிற்கு மேலும் வழிகோலும்

[லண்டன்]

தமிழீழ விடுதலைப்புலிகள் ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பை நான்காவதுதடவையாகஅறிவித்திருப்பதை இலங்கையின்சமாதான முயற்சியில்ஈடுபட்டுள்ளநோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் பாராட்டிவரவேற்றுமகிழ்ச்சிதெரிவித்தார்.

விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ப் ஐ.பி.சிதமிழ்வானொலிக்கு நேற்று அளித்த விசேட பேட்டியிலேபுலிகள் அறிவித்த

→ 8ஆம் பக்கம் பார்க்க

## விடுதலைப்புலிகளை ஓரம்கட்டிவிட்டு தீர்வைத் திணிக்க ஜனாதிபதி முயற்சி

### மன்னார் ஆயர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க விடுதலைப் புலிகளை ஓரங்கட்டிவிட்டு தீர்வு ஒன்றினை திணிக்க முற்படுகின்றார். இவ்வாறு ஐரோப்பிய நாடுகளுக்கு ஒருவாரகால விஜயத்தை மேற்கொண்டு நாடு திரும்பிய மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் மீது தீர்வு ஒன்றைத் திணிப்பதற்காகத்தான் ஜனாதிபதி ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்து புலிகளைத் தடை செய்யுமாறு கோரியுள்ளார். இது சமாதானத்திற்கான சூழ்நிலையை ஏற்படுத்தாது என்றும் தெரிவித்த மன்னார் ஆயர் முன்பிருந்த தமிழ் இயக்கங்கள் இணக்கப்பாட்டுக்கு வந்தது போல புலிகளும் வருமென அரசு எதிர்பார்க்கிறது ஆனால் அப்படி நடைபெறுவது சாத்தியமில்லை என்றும் தெரிவித்தார். (வ)

### மட்டக்களப்பில் விமானம் குண்டு வீச்சு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் மீது நேற்றுக்காலை விமானக் குண்டு வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டது.

தொப்பிகல காட்டுப்பகுதி மற்றும் புலிபாய்ந்தகல் ஆகிய பிரதேசங்கள் மீது ஐந்து குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தின.

இத் தாக்குதல் சம்பவங்களினால் ஏற்பட்ட சேதவிபரம் இதுவரை வெளியிடப்படவில்லை.

இச் சம்பவத்தையடுத்து இராணுவ கட்டுப்பாடற்ற புலிகளின் பிரதேசத்துக்கு பொதுமக்கள் செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் வன்னிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சினால் 4 பொதுமக்கள் உடல்சிதறிப்பலியாகியமை இங்கு குறிப்பிடத்தக்கது. [இ-4]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கைது செய்யப்படுபவர்கள் மீது
# வழக்குத் தொடர ஆதாரமில்லாவிடில்
# உடன் விடுதலைசெய்ய வேண்டும்

(கொழும்பு)
பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசர காலச்சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கு போதிய ஆதாரமில்லாவிடில் அவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு தொல்லை தவிர்ப்புக்குழு கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தின்போது தீர்மானம் எடுத்துள்ளது.

மேற்படி தடைச்சட்டங்களின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் மீது விசாரணைகளோ வழக்குத் தாக்கலோ இன்றி புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பும் பாதுகாப்பமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் திட்டத்திற்கு தொல்லை தவிர்ப்புக்குழு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

போதிய ஆதாரமில்லாதவர்களை வீட்டிற்கு அனுப்பாது புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்புவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அதிகாரமில்லை எனவும் அக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக நீதியமைச்சரும், தொல்லை தவிர்ப்புக்குழு அங்கத்தவருமான நீதியமைச்சர் பட்டி வீரக்கோன் பாதுகாப்பமைச்சு மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தொல்லை தவிர்ப்புக்குழுவிடம் உறுதியளித்துள்ளார். (செ)

## அழகியல் வெளியீடு

[அரியாலை]
யாழ்மாவட்ட தேசியகல்வியியற் கல்லூரி நுண்கலைப் பிரிவினரால் கடந்த வெள்ளிக்கிழமை அழகியல் என்ற ஏடு வெளியிட்டுவைக்கப்பட்டது.

பீடாடதிபதி தி.கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற இவ் வெளியீட்டு நிகழ்வில், ஆய்வுரையை நுண்கலைத்துறை விரிவுரையாளர் க. ரட்ணேஸ்வரன் நிகழ்த்தினார். (உ-106)

## அறிவித்தல்

திக்கம் வடிசாலையின் சகல பிரிவின் ஊழியர்களையும் இன்று (23. 03. 2001) பிற்பகல் 2.00 மணிக்கு பனை அபிவிருத்திச் சபை, தலைமை அலுவலகத்தில் தவறாது சமுகமளிக்கும்படி பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் அவர்கள் அறியத்தந்துள்ளார்.

பொது முகாமையாளர்,
திக்கம் வடிசாலை.

[கி-1633]

## இலங்கை மின்சார சபை
## யாழ். பிரதேசம்
## மின் தடை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் வளாக வீதியில் உள்ள பிரதான மின் நிலையத்தில் மின்மாற்றிகள் மாற்ற வேண்டியிருப்பதனால் பின்வரும் நாட்களில் யாழ் மாநகர சபை எல்லைக்குள்ளான பகுதிகளுக்கு மின் விநியோகம் தடைப்படும்.

| திகதி | நேரம் |
|---|---|
| 25 03-01 | காலை 9.00 மணி தொடக்கம் |
| | 26-03-01 பிற்பகல் 5.00 மணி வரை |

தடைப்படும் பகுதி
யாழ். மாநகரப் பகுதி

| திகதி | நேரம் |
|---|---|
| 25-03-01 | காலை 9.00 மணி தொடக்கம் |
| | பிற்பகல் 5.00 மணி வரை |

தடைப்படும் பகுதி
குடா நாடு முழுவதற்கும்

வேலைகள் பூர்த்தியடைந்ததும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பதாக மின் வழங்கப்படும் என்பதையும் பாவனையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

இதன் காரணமாக மின் பாவனையாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்
சுன்னாகம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''
இலங்கை மின்சார சபை.

(கி-1631)

## முதலாவது பிறந்த தின வாழ்த்து

கோ. ரம்மியா
23 - 03 - 2001

5ம் வட்டாரம் நயினாதீவை வசிப்பிடமாகக் கொண்ட
**கோபாலசிவம் யசோதினி தம்பதியினரின்**
செல்வப் புதல்வி.
**ரம்மியா**

தனது முதலாவது பிறந்த தினத்தை தமது இல்லத்தில் இன்று 23-03-2001 [வெள்ளிக்கிழமை] விமர்சையாக கொண்டாடுகிறார். அவரை நயினை நாகபூஷணி அம்மன் திருவருளால் பதினாறு பேறுகளையும் நிறைவுறப் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்
காராளப்பிள்ளை (அப்பப்பா)
வடிவாம்பிகை (அம்மம்மா)
இந்திரா (அப்பம்மா)
ரமணி (மாமி)
குமரதாசன் (சித்தப்பா)
துவாரகா (மாமி)
தேவி (அப்பம்மா)

5ம் வட்டாரம்,
நயினாதீவு.

திருமதி கே. குமரதாசன்
கே. துவாரகா

(கி-1628)

## இராசி பலன்

23.03.2001
(பங்குனி 10, வெள்ளி)
சதுர்த்தசி வை 6.06 வரை
சதயம் பி.ப. 3.06 வரை
ராகு காலம் 10.47-12.17
சுப நேரம் 6.17 - 7.47

**மேடம்**
தனலாபம், மன மகிழ்ச்சி, தெய்வ தரிசனம், காரியம் கை கூடும்.

**இடபம்**
முயற்சி கை கூடும், சுப நிகழ்ச்சி, நல்ல செய்தி, தொழில் சிறப்பு.

**மிதுனம்**
பிரயாணம், வயிற்றுக் கோளாறு, பயந்த சுபாவம், கட்டுப்படுதல்.

**கடகம்**
வியாதி, மனக்கிலேசம், எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தடங்கல்.

**சிங்கம்**
சுவாரஸ்யம், பிரயாணம், போசன சுகம், காரியஜெயம்.

**கன்னி**
பகைவர் விலகுவர், தன வரவு ஆரோக்கிய நிலை, முயற்சி விருத்தி.

**துலாம்**
வியாபாரச் சிறப்பு, திடீர் நன்மை, தாழ்வு நிலை, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
தன்நம்பிக்கைக் குறைவு, ரோகம், காரிய தாமதம், சஞ்சலம்.

**தனுசு**
நினைத்த காரியம் கைகூடும், வாக்கு மேன்மை, தன வரவு, இனிய சம்பவம்.

**மகரம்**
விதண்டாவாதம், தன விரயம், கௌரவக் குறைவு, காரிய தாமதம்.

**கும்பம்**
தெய்வ தரிசனம், பெரியோர் ஆசி, ஜனவசியம், நண்பர்கள் உதவி.

**மீனம்**
அலைச்சல், நித்திரைக் குறைவு பிரயாணம், முயற்சி தாமதம், சுப செலவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## கிளைக்குழு தேர்தல்

(யாழ்ப்பாணம்)
வலிகிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கத்துக்கான புதிய நெறியாளர் குழுத் தேர்தல் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி நீர்வேலியிலுள்ள மேற்படி சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (உ)

## அலங்கார உற்சவம்

(நீர்வேலி)
நீர்வேலி அருள்மிகு காளியம்மன் கோவில் அலங்கார உற்சவம் இம்மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது. (உ)

## பொன்னணிகள் போர்

(யாழ்ப்பாணம்)
இன்று யாழ்.குடா நாட்டில் மற்றுமோர் பெரும்துடுப்பாட்டமான பொன்னணிகள் போர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு இடையில் நடைபெறவுள்ளது.

இவ் 84 ஆவது பொன்னணிகள் போர், யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இதில் சம்பத்திரிசியார் கல்லூரி அணி, எம் பிரசாந்தயோசவ் தலைமையிலும் யாழ்ப்பாணக் கல்லூரி அணி. ஜி.பிரகாஷ் தலைமையிலும் மோதவுள்ளன. (உ-9)

## அரசாங்க அறிவித்தல்
## ஏல விற்பனை
## பாவித்த உபகரணங்கள்

பாவித்த குளிர்சாதனப் பெட்டிகள், தட்டச்சு இயந்திரங்கள், சுவர் மணிக்கூடுகள், மின்விசிறிகள், வாகன பற்றறிகள் முதலியன யாழ் பொது வைத்திய சாலையில் 02. 04. 2001 மு.ப. 10.00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

சித்தி பெறும் கேள்வியாளர் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி அன்றைய தினமே பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

இப் பொருட்களை அன்றைய தினம் மு.ப. 9.00 மணிமுதல் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி
செல்வி என். கனகரத்தினம்
பணிப்பாளர்,

பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
22 03 2001

[கி-1632]

## திருமண அழைப்பிதழ்

**அன்புடையீர்!**
நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனி மாதம் 12-ம் நாள் [25-03-2001] ஞாயிற்றுக்கிழமை பகல் 11-27 மணி முதல் 12-20 மணி வரையுள்ள உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறைச் செல்வன்
**பாலமுருகன்**
(நாதஸ்வரம்) அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறைச் செல்வி
**ஹாயத்திரி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு கோண்டாவில் மேற்கு ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் (காளி கோவில்) மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்,

திரு. திருமதி. பொ. சுப்புச்சாமி தம்பதிகள்
(நாதஸ்வர வித்துவான்)
கலைமகள் வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

திரு. திருமதி. V. K. கானமூர்த்தி
(நாதஸ்வர வித்துவான்)
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(2654)

# டானியலை "கல்வியாளர்" புறந்தள்ளினாலும்

# அவரது மொழி நடை அவரை கௌரவிக்கும்!

எழுத்தாளர் அமரர் கே. டானியலின் 15ஆவது அமரத்துவதினம் இன்றாகும். அதனை ஒட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. (ஆ)

"ஒரு சமூக அமைப்பின் கட்டுக் கோப்புகளிலிருந்து விடுபட்டு வேறோர் சமூக அமைப்பை நோக்கிச் செல்லும் மக்களிடையேயும் முந்திய சமூக அமைப்பின் நிலை கொண்டு அதையே தங்களது சுகவாழ்வுக்கு நிரந்தரமாக்க முற்படுபவர்களிடையேயும் உள்ள முரண்பாடுகளையும் கருவூலமாகக் கொள்ளப்பட்ட ஒரு சிருட்டிப்பை ஒரு "தலைவன், தலைவி" என்ற வரப்புக்குள் அடக்கிவிடுவதும் தொடக்கம், உச்சம், முடிவு என்ற உருவத்தினால் போர்த்து விடுவதும் இயல்புக்குப் புறம்பானதாகும்."

என, 'கானல்' என்னும் நாவலின்முன்னுரையில் எழுத்தாளர் கே. டானியல் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். மக்களின் வாழ்வியலை நன்கு ஊன்றிக்கவனித்து அதனைத் தனதுநாவல்களிலே ஆவணப்படுத்தியுள்ளார். அவருடைய எழுத்து யாழ்ப்பாணத்து ஒரு காலத்துச் சமூக அமைப்பை விளக்கிக் காட்டுகிறது. இலங்கை மட்டுமல்ல தென்னகமும் அறிந்த எழுத்தாளர் டானியல் 15.4.1927ல்யாழ்ப்பாண மண்ணிலே பிறந்து 23.3.1986ல் தஞ்சை மண்ணிலே மறைந்தவர். அவர் எழுதிய டானியல்கதைகள், உலகங்கள் வெல்லப்படுகின்றன. போராளிகள் காத்திருக்கின்றனர், கோவிந்தன், பஞ்சமர், இலங்கையிலிருந்து ஒரு இலக்கியக்குரல், பூமரங்கள், அடிமைகள், நெடுந் தூரம், மையக்குறி, முருங்கையிலைக் கஞ்சி, கானல், பஞ்சகோணங்கள் டானியலின் குறுநாவல்கள் என்னும் நூல்கள் இன்று அவருடைய பணிக்குச் சான்றாக இருக்கின்றன. டானியலின் எழுத்து யாழ்ப்பாணத்துச் சமூகத்தைக் கண்முன்னே எடுத்துக் காட்டும் சிறப்புடையது. ஈழத்து நாவலாசிரியர்களிடையே டானியல் ஒரு தூண்டா விளக்காகநின்றுஒளிதருபவர்.



அவருடைய நாவல்களின் மொழிநடை சிறப்பானது. வேறுபட்ட சமூகங்களின் வாழ்வியல் நடைமுறைகளை எடுத்துக்காட்ட டானியல் கையாண்ட கருவிமொழி நடை. அந்த மொழிநடையை விளங்கிக்கொள்ளத் தென்னகத் தமிழர் மேலதிக விளக்கம் கேட்டு நின்ற காலமும் இருந்தது. ஆனால் இன்று அந்நிலை மாறிவிட்டது யாழ்ப்பாணத்துப் பேச்சுமொழியின் உயிரோட்டத்தை அனைவரும் அறியச் செய்தவர் டானியல். தனது சமூகப்பார்வையை மொழியினூடாக எடுத்துக்

பாணத்துச் சமூகக் கட்டுக் கோப்பை எடுத்துக்காட்டும் அதேவேளையில் அது வேறொரு சமூக அமைப்பை நோக்கிச் செல்வதையும் எடுத்துக் காட்டுகிறது.

தொழில் வேறுபாட்டினால் சமூக நிலையிலே ஏற்றத் தாழ்வு பேணப்பட்டதை டானியலின் எழுத்து தெளிவாகவிளக்கியுள்ளது. 'அடிமை குடிமை' வாழ்வு நிலை இதற்குச் சான்றாக இருந்ததையும் டானியல் சுட்டிக் காட்டினார். பல்வேறு தொழில் செய்வோரது தொடர்பு டானியலுக்கு இருந்தமையால் அதனைத்

அதன் கட்டமைப்பின் குலைவை இன்றுநாம் தெளிவாக விளங்கிக் கொள்ள டானியல் வழிகாட்டியுள்ளார். அவருடைய கூர்மையான சமூக நோக்கை யாழ்ப்பாணத்தவர் இன்னமும்விளங்கிக் கொள்ளவில்லை ஆனால் 'மானிடவியல் ரீதியிலே திரு. டானியலுடைய நாவல்கள் யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தினை விவரணஞ் செய்யும் ஒழுங்கான இனச் சரிதைகளெனக் கூறுவதில் எனக்கு எவ்வித தயக்கமும் இல்லை. யாழ்ப்பாணத்து மரபுவழிப் பண்பாட்டின் அடிச்சுவடுகளை கண்டு கொள்வதற்கு பல அருமையான தகவல்கள் அவருடை

கலாநிதி
**மனோன்மணி சண்முகதாஸ்**
வருகைஆய்வாளர் யப்பான்

தெளிவாக நேர்மையாக எழுத்திலே வடிக்கமுடிந்தது. இலக்கியத்தின் சமூகப்பணிகளுள் ஒன்று நடைமுறை வாழ்வினூடே புதைந்துகிடக்கும் மனித இனங்களின் பண்பாட்டம்சங்களையும் விபரித்துக் கூறுவதாகும் சமூகத்தின் அன்றாட நிகழ்வுகளை அவதானித்து அந்த அவதானிப்பு

நாவல்களிலே காணப்படுகின்றன.' என விதந்துரைக்கிறார் யப்பானிய மானிடவியல் பேராசிரியரான யசுமச செக்கினே. டானியலின் 'தண்ணீர்' நாவல் நூலாக்கம் பெற உதவிய இப்பேராசிரியர் டானியலையப்பானிய நாவலாசிரியை திருமதி மிச்சிகொ இஷிமுரெவுடன் ஒப்பிட்டு எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பை ஆறுமாத காலம் (1980 இல்) தங்கியிருந்து நேரடியாகக் கண்ட செக்கினே டானியலைத் தெளிவாக விளங்கிக் கொண்ட பிறநாட்டு மானிடவியல் ஆய்வாளராவார்.

**எழுத்தாளர் டானியலின் எழுத்துக்கள் யாழ்ப்பாணத்துச்சமூகத்தின் அமைப்பைக்கண்முன்னேஎடுத்துக் காட்டும் சிறப்புடையது. ஈழத்துநாவலாசிரியர்களிடையே டானியல் ஒரு தூண்டா விளக்காக நின்று ஒளி தருபவர்.**

காட்டிய அவருடைய எழுத்தாற்றல் இணையற்றது. ஒரு சமூகம் தன்னுடைய கட்டுக் கோப்புகளிலிருந்து விடுபட்டு வேறொரு சமூக அமைப்பை நோக்கிச் செல்வதை டானியலின் எழுத்து எடுத்துக் காட்டியுள்ளது.

யாழ்ப்பாணத்துச்சமூகக்கட்டுக் கோப்பினைஆய்வு செய்ய முற்படுவோர் டானியலின் நாவல்களைப் படிக்கவேண்டியது அவசியம். எமதுஇன்றைய இளந்தலைமுறையினர் தமது சமூகத்தின் முன்னைய நிலையை அறிவதற்காக டானியலின் எழுத்துக்களைத் தேடிப் படிக்கவேண்டும். பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள், கானல், பஞ்சகோணங்கள் என்னும் ஐந்து நூல்களும் யாழ்ப்

களை மறுநாள் அவதானங்களோடு டானியல் ஒப்பிட்டுப் பார்த்தார். சமூகத்தின் பொதுவான நடைமுறைகளோடு அந்த அவதானங்களைச் சேர்த்துநோக்கினார். அதற்கும் மேலாக அறியப்பட்டிருந்த நீண்ட இறந்த கால நிகழ்வுகளோடு பொருத்திப் பார்த்து அதற்கான வேறுபாட்டை உணர்ந்து கொண்டார். முடிவிலே எதிர் காலத்தைத் தனது நினைவிலே எழுதத் தொடங்கினார். தனது 59 ஆண்டு வாழ்க்கை அனுபவத்தை வைத்து டானியல் எழுதிய நாவல்கள் யாழ்ப்பாணத்துச் சமூக நடைமுறைகளை எல்லோரும் அறிய வைத்தன.

மாறிவரும் சமூகத்தை

டானியலின் எழுத்துப் பணியை மதிப்பீடு செய்து அவரைக் கௌரவிக்க யாழ்ப்பாண உயர் கல்வி நிறுவனம் இன்னும் தயாராகவில்லை. அதறகுத் தடையாக இருப்பது என்ன என்பதை யாழ்ப்பாணத்துச் சமூகம் நன்கறியும். எனினும் கல்வியாளரின் மௌனம் டானியலின் ஆற்றலை மறைத்து நிற்கின்றது டானியலின் வாழ்வுச் சூழல் அவர்களை வாய்மூடி மௌனியாக்கிவிட்டது என்பதில் ஐயமில்லை. பெருமையும் புகழும் டானியலுக்கு அவர்கள் தர முன்வராவிட்டாலும் அவருடைய எழுத்து என்றும் அதை வழங்கி நிற்கும். டானியலின் சமூகப்பார்வையும் வழிகாட்டலும் காலத்தால் அள்ளுண்டு போகாமல் காப்பாற்றப்படவேண்டும்.

## காணாமற்போனோரின்

# உறவினர்களை அழைப்பதில்சிக்கல்

# கிராம அலுவலர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் காணமற் போனோர் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்வதற்கு அவர்களுடைய உறவினர்களைத் தேடுவதிலும் பொலிஸார் பல சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து காணாமற் போனோரின் உறவினர்களை அழைப்பதற்காக குறிப்பிட்ட சில கிராம உத்தியோகத்தர்களுக்கு சுன்னாகம் பொலிஸார் அழைப்பு விடுத்துள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு,

நல்லூர் வடக்கு ஜே/106 கிராம உத்தியோகத்தர் சிவராஜா ஜெயக்குமார்.

அரியாலை கிழக்கு ஜே/96 கிராம உத்தியோகத்தர் தம்பையா தேவராஜாவை அப்பகுதி முன்னாள் கிராம உத்தியோகத்தர் முத்துக்குமாருடனும்,

சுழிபுரம் ஜே/169 பிரிவு கிராம உத்தியோகத்தர் சதாசிவம் வைத்தியநாதன் என்பவரை அப் பகுதியைச் சேர்ந்த தவச்செல்வம் புஸ்பலதா என்பவருடனும் தவறாது வரும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. [உ-2]

# சனசமூக நிலையங்களுக்கு

# தொலைக்காட்சிப் பெட்டி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி, மற்றும் மின்பிறப்பாக்கி என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் காரைநகர் பகுதியில் உள்ள 6 சனசமூக நிலையங்களுக்கான தொலைக் காட்சிப்பெட்டி, மின் பிறப்பாக்கி விரைவில் வழங்கப்படவுள்ளதாக ஊர்காவற்றுறைப் பிரதேசசபைத் தலைவர் என். மதனராஜா தெரிவித்தார்.

ஏற்கனவே ஊர்காவற்றுறை, அனலைதீவுப் பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு இவை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

## உள்மண்டபம் அமைப்பு

(நல்லூர்)

திருநெல்வேலி அரசடி ஸ்ரீசிவகாமசுந்தரி ஆலயத்தின் உள்மண்டபக் கொட்டகை அமைக்கும் பணி இடம் பெற்று வருகிறது. (உ-103)

## கொடுப்பனவை பெறுக

(மானிப்பாய்)

வலிதென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுஜன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும் மற்றும் கசநோய் தொழுநோய், புற்று நோய் என்பவற்றிற்கான உதவிப் பணத்தைப் பெறுபவர்களினதும் பங்குனி மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ-120)

பரியோவான் ..

**★ கே. பிரகாஷ்**
4 வது வருடம் அணியின் தலைவர், எந்த இடத்தில் நின்றும் பந்தை தடுக்கக் கூடிய வல்லவர். அத்துடன் நடுப் பகுதி துடுப்பாட்ட வீரரான இவர் ஒரு ஓவ் [Off] சுழல் பந்து வீச்சாளருய ஆவார்.

**★ எஸ்.பிரந்தாவன்**
3 வது வருடம், துணைத் தலைவர் வலதுகை துடுப்பாட்ட வீரரான இவர் அணி [7ஆம் பக்கத் தொடர்ச்சி] யின் விக்கெட் காப்பாளரும் ஆவார்.

**★ பி. காகிதரன்**
4 வது வருடம், எல்லாத் துறைகளிலும் பிரகாசிக்க கூடிய இவர் வலது கை நடு நிலை துடுப்பாட்டகாரர் ஆவார்.

**★ எஸ்.கார்த்தீபன்**
3 வது வருடம, அடித்து ஆடக்கூடிய துடுப்பாட்டவீரரும் வலது கை பந்து வீச்சாளரும். எந்த நிலையிலும் நின்று பந்து தடுக்கக் கூடியவருமமான இவர் சந்தர்ப்பம ஏற்படும் போது விககெட்காப்பாளராக கடமைஆற்றுவார்.

**★ வி. ராஜீவ்குமார்**
3 வது வருடம இடதுகை வேகப்பந்து வீச்சாளர். அதது டன் நிடுநிலை துடுப்பாட்ட வீரரான இவர் கிட்ட நின்று பந்தை தடுக்கக் கூடியவர்.

**★ பி.சாள்ஸ்புறோனிசன்**
2வது வருடம, மெதுவாகப் பந்து வீசககூடிய இவர் பந்தை அடிததாடவும வலலவர்.

**★ கே. றொகான்**
2 வது வருடம, நம்பிக்கைக்குரிய ஆரமப துடுப்பாட்ட வீரர் அததுடன வலது கை நடுத்தர பநது வீச்சாளர் அத்துடன எநத நிலையிலும நின்று பந்தை தடுககககூடியவர்.

**★ ஆர்.மதுசன்**
3 வது வருடம, வலது கை ஒவ் (Off) சுழல பந்து வீச்சாளர நடு நிலை துடுப்பாட்ட வீரருமான இவர் கிட்டநின்று பந்தை தடுப்பதில வலலவர்.

**★ எஸ். நவநீதன்:**
2வது வருடம இடதுகை துடுபபாட்ட வீரரான இவர் வலதுகைநடுத்தரவேகபபநது வீச்சாளருமபந்து தடுப்பதில கெட்டிககாரரும ஆவார்.

**★ கே. கார்த்திக்**
புதுமுகம வலது கை அழகான துடுப்பாட்ட வீரர் அதது டன் வேகப்பந்து வீச்சாளரும் ஆவார்.

**★ எஸ். பிரசன்னா**
புதுமுகம வலதுகை வேக பந்து வீச்சாளர் அத்துடன் வலது கை துடுப்பாட்ட வீரரும் அண்மையில் நின்று பந்தை தடுப்பதில் வல்லவராவர்.

**★ டி. துரன்**
2வது வருடம் வலது கை ஒவ் (off) சுழல பந்து வீச்சாளர் அத்துடன் நடுநிலை துடுப்பாட்ட வீரரான இவர் எந்த நிலையிலும் நின்று பந்தை தடுக்ககூடியவர்.

**★ ஜே. பிரகாஷ்**
புதுமுகம வலதுகை துடுப்பாட்ட வீரரும வலது கை வேகப்பநது வீச்சாளர்நலல பந்து தடுபபாளரும ஆவார்.

**★ எஸ துஷ்சந்தன்**
புதுமுகம வலது கை துடுப்பாட்ட வீரரும வேகப பநது வீச்சாளருமான இவர் எந்த இடத்திலும் நின்று பந்தை தடுக்ககூடியவர்.

**★ எ. ஈழமாறன்**
புதுமுகம இவர் சகலதுறை ஆட்டக்காரன.

**★ ஆர். சேஜோன்**
புதுமுகம வலதுகை துடுப்பாட்ட வீரரான இவர் விக்கெட் காபபாளராகவும் கடமை ஆற்றக் கூடியவர்.

**★ எஸ்.துஷானந்தன்**
புதுமுகம இடதுகை துடுப்பாட்ட வீரரான இவர் வலது கை ஒவ் off சுழல்பந்துவீச்சாளர்.

# உயர்தரமாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல.49 தொகுப்பு ரீ. மயூரன்

### பொது உளச் சார்பு

★ கீழே உள்ள வினாக்களில் ஒரு சொல் ஏனைய சொற்களில் இருந்து வேறுபடுகிறது அதன் கீழ் கீறிடுக.

1) வருத்தம், பொருத்தம், விருத்தம், திருத்தம், மாருத்தம்
2) குமரன், சமரன், குமாரன், அமரன், தமரன்
3) கூட்டம், மிச்சம், பக்கம், பங்கம், துக்கம்
4) முதுகு, ஆபரணம், மஞ்சு, பனி, மயில்
5) MEET, MEAT, FAT CAT, RAT

★ முதலிரு சொற்களுக்கிடையிலுள்ள பொருத்தத்தைக் கவனித்து இடைவெளியை நிரப்புக.

6) பனிக்கு குளிர்ச்சி போல வெயிலுக்கு ————————
7) கல்லில் இருந்து கட்டடம் போல முத்திலிருந்து ————————
8) மாணவனுக்குப் பள்ளி போல, இராணுவத்திற்கு ————————
9) TURIH, THIRU ஆயின் DYLRA ————————
10) ஆற்றிலே நீர் போல வானிலே ————————

★ கீழே கொடுக்கப்பட்ட எண் தொடர் ஓர் ஒழுங்கு முறையில் அமைந்துள்ளது. தரப்பட்ட இடைவெளியை நிரப்புக.

11) 11, 15, 19, 23 ————————
12) ————————, -5, -1, ,3 7
13) 5, 15, 45, ————————, 405
14) 12, 5, ————————, -2, -9
15) 2, 4, 16, 256, ————————

★ பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமானவிடைதருக.

16) 3 பூனை 3 எலிகளை 3 நிமிடத்தில் கொன்றால் 100 பூனை 100 எலிகளை எத்தனை நிமிடத்தில் கொல்லும்?
17) அகிலனுக்கு 1கதவுக்கு வர்ணம் பூச 2 மணித்தியாலங்கள் தேவை. காயாவுக்கு அக்கதவுக்கு வர்ணம் பூச 3 மணித்தியாலங்கள் தேவை ஆயின் இருவரும் சேர்ந்து பூச எவ்வளவு நேரம் தேவை?
18) தொட்டியினுள் 5/8 டங்கு நீர் இருந்தது, அதில் இருந்து 9l ஐ எடுத்த போது $\frac{1}{4}$ பங்கு ஆகியது. தொட்டியின் கொள்ளளவு யாது?
19) 1 கூடையில் உள்ள முட்டைகள் ஒவ்வொரு நிமிடமும் இரட்டிக்கக் கூடியவை. 50 நிமிடத்தில் அக்கூடை நிரம்பி விட்டது ஆயின் அது அரைவாசியாக இருந்த நேரம்?
20) திரு ராசையா என்பவர் 30m ஆழமான கிணற்றுக்குள் இருக்கிறார் அவர் ஒரு நாளுக்கு 3m ஏறி 2m சறுக்குவார் ஆயின் அவர் மேலே ஏறிவர எவ்வளவு நாள் எடுக்கும்?

### பொது அறிவு

★ பின்வருவன தொடங்கப்பட்ட-இடம்பெற்ற ஆண்டுகளைத் தருக

21) மக்கள் வங்கி ஆரம்பித்தது ————————
22) வேம்படி மகளிர் கல்லூரி தொடங்கப்பட்டது ————
23) இயேசுக் கிறிஸ்து பிறந்தது ————————
24) டைட்டானிக் கப்பல் சிதைவுற்றது ————————
25) ஐ. நா உருவாக்கப்பட்டது - - - -

★ பின்வரும் வினாக்களுக்கு தரப்பட்ட 4 விடைகளுள் ஒன்றைத் தெரிவு செய்க

26) 1960 இல் கட்டப்பட்டு உலகிலேயே மிக உயரமான ரெலிவிஷன் கோபுரம் அண்மையில் எரியுண்டது. அது உள்ள நாடு
   1) ரஷ்யா 2) சீனா
   3) ஜப்பான் 4) அமெரிக்கா
27) கடந்த ஆண்டு சிலியில் ஜனாதிபதியாக பதவியேற்றவரது பெயர்
   1) றிகார்டோலாகோஸ் 2) புடின்
   3) கெனார்டோ 4) அஷன்ஷீ
28) தாவரங்களின் நிறத்தோற்றத்திற்கு காரணமான பொருள்
   1) வெள்ளுருமணி 2) பச்சைய உருமணி
   3) நிறவுருமணி 4) குளோரோபில்
29) தாவர, விலங்குக் கலங்களுக்குப் பொதுவான புன்னங்கம்
   1) பச்சைய உருமணி 2) புன்வெற்றிடம்
   3) இழைமணி 4) கலச்சுவர்
30) இலங்கையின் நீளம் யாது
   1) 273 Km 2) 447Km
   3) 512 Km 4) 395 Km

★ பின்வருவனவற்றிற்குச் சுருக்கமான விடை தருக

31) ஐரோப்பாவின் தொட்டில் என அழைக்கப்படும் நாடு — — — — —
32) ஆபிரிக்காவின் நோயாளி என அழைக்கப்படும் நாடு———
33) நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு — — — —
34) சீனாவின் துயரம் எனப்படுவது எது — — — —
35) மிக உயரத்தில் உள்ள ஏரி எது — — — —
36) செந்நிற மான கோள் எது — — — — —
37) செந்நிறமான கடல் எது — — — —
38) உலகில் மிகவும் நீண்டநதி எது — — — —
39) பூமியைப் போல் காற்றுஉடைய கோள் எது ——— — —
40) இந்திய ஜனாதிபதி யார் — — — — —

**குறிப்பு:-**

விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 27-03-2001 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## அறிவியல் வினா-48

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

★ செ. ஜெரீம் நிரோஷன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
★ ச. சயந்தன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
★ ஜெ. மயூரன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி.
★ தமிழ்ச்செல்வி விசுவகேது யா/ யூனியன் கல்லூரி.
★ த. கிருஷாந்தி 41/1 அரச வீதி நல்லூர்.
★ எஸ். அனனோமினா வேம்படி மகளிர் கல்லூரி.
★ ம. சுபாஸ்கரன் யா/ அருணோதயாக் கல்லூரி
★ கே. நிலா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## அறிவியல் வினா இல-48 விடைகள்

1) வெளவால்
2) திகரம்
3) அரகர
4) MI
5) 4
6) 72
7) விமானம்
8) 30
9) Ulrad
10) தலை
11) 15
12) 17
13) 16
14) 9
15) 150
16) E
17) B
18) A
19) B, D
20) E
21) 1866
22) 1841
23) 1815
24) 1817
25) கி. மு 563
26) Green Book
27) புதன்
28) பரனைட்
29) மோஸ்
30) அவுஸ்திரேலியா
31) வேள்-வைட் வெப்
32) லோக்கல் ஏரிய நெட்வேக்
33) வெரி ஸ்மால் அபெர்ச்சர்
34) சென்றல் புறோசோசிங் யுனிற்
35) கைப்பர் ரெக்ஸ்ட் ரெரோ புறோட்டோக்கோல்
36) ஆங்கில இலக்கியத் துறை
37) மார்ச் 15
38) மார்ச் 22
39) இந்தியா
40) மேற்கிந்தியத் தீவுகள்

## அறிவியல் பகுதி வினா இல- 49

"வலம்புரி"

இல: 15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ……………………

சொந்த முகவரி: ……………………

கற்கும் பாடசாலை : ……………………

மாணவர் கையொப்பம் : ……………………

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

# செய்தித் துளிகள்

## திருப்பாடுகளின் காட்சி 'காவிய நாயகன்'

(யாழ்ப்பாணம்)

தற்போது அனுஷ்டிக்கப் பட்டுவரும் தவக்காலத்தின் நிறைவையொட்டிதிருமறைக் கலாமன்றம் வருடம்தோறும் நடத்திவரும் திருப்பாடுகளின் காட்சி 'காவிய நாயகன்' எதிர்வரும் 5,6,7,8, ஆம் திகதிகளில் மாலை 6 மணி முதல் மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

இம்முறை திருமறைக்கலா மன்ற இயக்குநரின் நெறியாள்கையில் 150 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் இதில் பங்குபற்றவுள்ளனர். [உ-104]

## 45 வது ஆண்டு விழா

(சங்கானை)

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகம் மற்றும் சனசமூக நிலையத்தின் 45 வது ஆண்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப 4.30 மணியளவில் சித்தன்கேணி ஸ்ரீமகாகணபதிப் பிள்ளையார் ஆலயமுன்றலில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் தி. சஞ்ஜேதனன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் பிரதமவிருந்தினராகவும், பிரதேச செயலாளர் மா. குலேந்திரன் மற்றும் சங்கானை பிரதேச செயலர் நா. வேதநாயகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வினை முன்னிட்டு, அப்பகுதியில் இரவு நேர ஊரடங்கைத்தளர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-124)

## கட்டடம் புதுமெருகு

(நல்லூர்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் 'சிவகுருநாதர் விசாலாட்சி, மண்டபம் உட்பட கல்லூரியின் கட்டடங்கள் பலவும் மீள்வர்ணம் தீட்டப்பெற்றுப் புதுமெருகூட்டப்பட்டு வருகின்றன. [உ-103]

## புகையிலைச் செய்கையால் பலன்

(நல்லூர்)

தீவகப் பகுதியில் புகையிலைச் செய்கை இம்முறை நன்கு பலனளித்துள்ளதாகப் புகையிலைச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ-103)

## தடக்கி விழ்ந்து காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன் தினம் இடம்பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் காயமடைந்த மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நா. நாகராஜா (வயது 38) என்பவர் மாடு தடக்கி வீழ்ந்ததில் கை முறிந்த நிலையிலும்,

உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலய மாணவன் ஜா. டிஷான் (வயது 9) வீட்டில் விளையாடிக் கொண்டிருக்கும் போது தவறி வீழ்ந்ததில் கையில் காயம் ஏற்பட்டும்,

கொக்குவிலைச் சேர்ந்த எஸ்.பிறேமா (வயது 36) என்பவருக்கு மரக் குற்றி கையில் விழுந்ததனால் கை முறிந்த நிலையிலும் யாழ், போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-2)

## மேலதிக பஸ்சேவை

(மானிப்பாய்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தையொட்டி அடியார்களின் வசதி கருதி மேலதிக போக்குவரத்துச் சேவையினை, நடத்துமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் வட பிராந்தியப் போக்குவரத்துச் சபை முகாமையாளரைகடித மூலம் கேட்டுள்ளார். (உ-120)

## பொலிஸ் வீரர்கள் தினம்

(கொழும்பு)

யுத்தத்தின் போது கொல்லப்பட்ட பொலிஸ் வீரர்கள் தினம் நேற்று முன் தினம் பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்தில் கொண்டாடப்பட்டது.

இக் கொண்டாட்டத்தில் பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு கலந்துகொண்டு உரையாற்றுகையில், இதுவரை 2ஆயிரத்து 770 பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார். (வ)

## செயற்பாட்டறை திறப்பு

(யாழ்ப்பாணம்)

கலட்டி உயரப்புலம் மெ. மி. த. க வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அதிபர் அலுவலகம், செயற்பாட்டறை திறப்பு விழா நேற்று முன் தினம் காலை பாடசாலை அதிபர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதமவிருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன், சிறப்பு விருந்தினராக உதவி கல்விப் பணிப்பாளர்களானயோ. ரவீந்திரன், இ.செ.சி.சங்க நல்லூர் பிரிவு உறுப்பினர் கே. எஸ். துரைரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-43,104)

## இடம் மாற்றம்

[நல்லூர்]

நல்லூர் பிரதேசசபையின் கொக்குவில் உபபணிமனை, கொக்குவில் பொது நூலகத்தின் முன்பகுதிக்கு மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

முன்பு இயங்கிவந்த கொக்குவில் உப-பணிமனையில், நூலகத்தின் இரவல் கொடுக்கும் பகுதி, பத்திரிகைபடிக்கும் பகுதி, சிறுவர் பகுதி என்பன செயற்பட்டுவருகின்றன.

உஷாத்துணைப்பகுதி மாத்திரம் தற்போதைய உப-பணிமனை இயங்கும் பகுதியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-103)

## இன்று ஒரு தகவல்

# அரசனும் அன்புள்ள நாயும்

இந்தியாவின் மேலைக் கடற்கரையில் 'சகியதிரி' என்ற மலைகள் உள்ளன. அங்கு ரைகர் எனும் ஒரு கோட்டை அமைந்துள்ளது. அந்தக்கோட்டையில் இரண்டு சமாதிகள். ஒன்று ஓர் அரசனுக்கு, மற்றையது அவனது பிரியமான நாய்க்கு. இந்த இரண்டும் சுமார் முன்னூற்று ஐம்பது வருடங்களாக இருந்து வருகின்றன. ஆம். மராட்டிய மன்னன் சிவாஜி. அவனின் வளர்ப்புநாய். இந்த இரண்டு சமாதிகள் தான் அவை.

சிவாஜி நாய் வளர்த்தார். இல்லை குழந்தையை வளர்த்தார் என்று தான் சொல்ல வேண்டும். அந்தளவிற்கு அதன் மீது அன்பு செலுத்தினார். சிவாஜிஅரண்மனையில் இருந்தாலும் சரி, அல்லது அவையில் இருந்தாலும் சரி, வேட்டையாடச் சென்றிருந்தாலும் சரி, அல்லது போர்க்களத்திற்குச் சென்றிருந்தாலும் சரி, எங்கு பார்த்தாலும் இரவும் பகலும் அந்த நாயின் இருப்பு அவருக்குப் பக்கத்தில் தான்.

இவர்கள் நட்பைக் கண்டு பொறாமை அடைந்தானோ என்னவோ, கூற்றுவன் ஒரு நாள் 'ரைகர்' கோட்டையிலிருந்த சிவாஜியைத் தன்னிடம் அழைத்துக் கொண்டு விட்டான் இறந்துபோன அரசனின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு, அவனுக்கு மரியாதை செலுத்த எண்ணற்ற மக்கள் சோகச் சுமை தாங்கி, கோட்டையைச் சூழ்ந்தனர். தம்பட்டங்கள் அதிர்ந்தன. பீரங்கிக் குண்டுகள் முழங்கின. சிப்பாய்கள் சிரந் தாழ்த்தி வணங்க அரசன் கடைசி யாத்திரைக்குத் தயாராக்கப்பட்டான். சந்தனக் கட்டையில் படுத்திருந்த அவனைச் செந்தீ சூழ்ந்தது.

அப்போது அனைவருமே வியக்கும் வண்ணம் அதுவரை எங்கோமறைந்திருந்த சிவாஜியின் அன்பு நாய் ஓடிவந்துஅந்தக் கொழுந்து விட்டெரியும் தீயில் குதித்துவிட்டது. அதன் பின் கொஞ்ச நாளில் அரசனுக்கு மட்டும் எழுப்பப்பட விருந்த சமாதிக்குப் பக்கத்தில் அவனுடைய அன்பு நாய்க்கும் ஒரு நினைவுச் சின்னம் எழுந்தது. இன்றைக்கும் அந்த இரண்டு சமாதிகள், ஒரு வாயில்லா ஜீவனுக்கும், ஒரு பகுத்தறிவு மனிதனுக்குமிடையே ஏற்பட்ட அந்தத் தெய்வீக நட்பைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

தகவல்:- எஸ். கிருஷ்ணசாமி
(அனிமல் சிட்டிசன்)

# மண் பெறுவதில் புதுவகைஉபாயம்
# அத்திவாரத்தை அகழும் பேர்வழிகள்

## மானிப்பாய் பகுதியில் அதிகரிப்பு

(சங்கானை)

யாழ். குடாநாட்டில் தற்போது எழுந்துள்ள மணல் மண்ணுக்கான தட்டுப்பாடு நிலையை அடுத்து மணல் பெறுவதில் கில்லாடிகள் சிலர் புதுவகை உபாயம் ஒன்றினைக் கையாண்டு வருகின்றனர்.

போரினால் பாதிப்புற்ற மற்றும் ஆட்களற்ற பாழடைந்த வீடுகளின் அத்திவாரங்களை கிளறி அதற்குள்ளிருக்கும் மண்ணை அகழ்ந்து எடுத்து கூடிய விலைக்கு விற்பதுடன், தமது தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றனர்.

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது

இது இவ்வாறிருக்க, வடமராட்சி கிழக்குப் பகுதியில் மண் அகழ்வுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையினால் கட்டட கூலித் தொழிலாளர்களின் குடும்பங்கள் பெரும் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர் கொண்டு நிற்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-124)

## சக்திவிருது வழங்கி கௌரவம்

(யாழ்ப்பாணம்)

இலவச சட்ட உதவிப் பிரிவினூடாக பெண்களுக்கு உதவிக்கரம் வழங்குவதில் திறம்படச் செயலாற்றி வரும் சட்டத்தரணி திருமதி சரோஜினி இளங்கோவனுக்கு சீடா நிறுவன சார்பில் சக்தி விருது வழங்கப்பட்டதை பாராட்டும் நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை மகளிர் அபிவிருத்திப் பணிமனையில் இடம்பெற்றது.

மகளிர் அபிவிருத்தி நிறுவன தலைவி சறோஜா சிவசந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு ஓய்வு பெற்ற நீதிபதிகளும், சட்டத்தரணிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (உ-9)

# யாழ்- கொழும்பு பயணம் பாஸ் முறையை நீக்குக

## ஈ.பி.டி.பி. கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கும், கொழும்பிற்குமான பிரயாணத்தின் போது பெற்றுக் கொள்ளப்படும் ''பாஸ்'' நடைமுறையை நீக்க வேண்டும் என்று ஈ.பி.டி.பி எம்.பிகள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த விடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ் கொழும்பு பயணத்தின் போது பொதுமக்கள் பல கஷ்டங்களையும் தரகர் மாரின் தொல்லைகளையும் அனுபவிப்பதால் பாஸ் நடைமுறையை ரத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

பாதுகாப்புச் சபையின் கூட்டம் புதன் காலை முதல் நண்பகல் வரை நடைபெற்றது, இக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாவைசேனாதிராசா குடா நாட்டு மீனவர் பிரச்சினை பற்றியும், வலி வடக்கில் மக்கள் மீளக் குடியேறுவது தொடர்பாகவும் கேட்டுக் கொண்டார்

(ா)

# தீவக மட்ட விளையாட்டு போட்டிமேதினத்திற்குமுன்

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதியில் நடத்தப்பட விருக்கும் தீவகமட்ட விளையாட்டு கழகங்கள், சனசமூக நிலையங்களுக்கிடையிலான விளையாட்டு குழு மற்றும் தனிப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளோர் எதிர் வரும் 23 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மே தினத்திற்கு முன்னதாக அனைத்து விளையாட்டுக்களினையும் நடத்தி முடிக்கவுள்ளதாக தீவக விளையாட்டுக்கழகங்களின் ஒன்றியத்தலைவர் எம். மெடோன் தெரிவித்தார்.

குதிரையோட்டம் நெடுந்தீவிலும், நீச்சல் போட்டி காரை நகரிலும், தாச்சிப் போட்டி அனலைதீவிலும், பட கோட்டிப்போட்டி புங்குடுதீவிலும், வலைப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம், எல்லே, கபடி என்பன ஊர்காவற்றுறையிலும் மென்பந்து கிரிக்கெட் நயின தீவிலும் இடம் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் விளையாட்டுப்போட்டி நிகழ்வில் 50திற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

# கைதான சட்டத்தரணி தொடர்ந்தும் காவலில்

[கொழும்பு]

தெஹிவளைப் பகுதியில் தற்கொலை அங்கிகள் கண்டு எடுக்கப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட புலிச் சந்தேக நபருக்கு சான்றுப்பத்திரம் வழங்கிய சட்டத்தரணி கனகநமநாதன் தொடர்ந்தும் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சட்டத்தரணி கனகநமநாதன் 'மனித உரிமைகள் காப்பகம்' என்ற அமைப்பின் தலைவராவார்

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு வர்த்தகர் ஆர். சில்வெஸ்டர் என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோழி முட்டைகள் வைக்கப்பயன்படும் பெட்டிகளுக்குள் இத்தற்கொலை அங்கிகள் மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் நடைபெற்ற பாதுகாப்புசபைக் கூட்டத்தில் தமிழ் எம்பிக்கள் சட்டத்தரணிகனகநமநாதனை விடுவிக்குமாறு கோரிக்கைவிடுத்துள்ளதைஅடுத்துபிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.

[ம]

# காக்கை தீவுக்கு கள்ளுத் தவறணையை மாற்றுக

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை 3 ஆம் கட்டையிலுள்ள கள்ளுத் தவறணையை காக்கை தீவு கடற்கரை வீதிக்கு இடமாற்றம் செய்யுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மானிப்பாய் தென்னை பனை அபிவிருத்திச் சபைத் தலைவரைப் பணித்துள்ளார்.

மேற்படிதவறணையை இடமாற்றம் செய்யுமாறு கோரி ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள 150 க்கு மேற்பட்ட பொது மக்கள் கையொப்பமிட்டு மகஜர்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலர், ஆனைக்கோட்டை கிராம சேவையாளர், மானிப்பாய் தென்னை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ஆகியோருக்கு அண்மையில் அனுப்பியிருந்தனர்.

(உ-120)

## 6ம் திகதிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

மத்திய வங்கி குண்டு வெடிப்பு வழக்கு, அரசசட்டத்தரணி நீதிமன்றத்திற்கு வராமையினால் அடுத்த மாதம் 6ம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. (வ)

## நள்ளிரவில் திருட்டு

(மானிப்பாய்)

சுதுமலை வடக்கிலுள்ள வீடொன்றில் பூட்டிய நிலையிலிருந்த இரு மகளிர் துவிச்சக்கர வண்டிகளும் உடுப்பு வகைகளும் நள்ளிரவு வேளை திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

இச் சம்பவம் கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை நள்ளிரவு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஊழியரான திரிலோகநாதன் அருட்செல்வி என்பவரது வீட்டிலேயே இடம்பெற்றுள்ளது (உ-120)

## நூலகம் திறப்பு விழா

[கல்வயல்]

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகம், தண்ணீர்த் தாங்கி என்பன எதிர்வரும் 25 ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளதாக அப்பாடசாலையின் அதிபர் வே. ஞானகாந்தன் தெரிவித்தார். (உ-111)

## ஆச்சேஸ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மறைமாவட்ட மரியாயின்சேனையின் 'ஆச்சேஸ்' விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதி புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலியுடன் ஆரம்பமாகி பி.ப. 2.00 மணிக்கு நிறைவு பெறும்.

மறை உரையை மரியாயின் சேனை ஆத்மீகத் தலைவர் அருட்திரு சகாயம் அடிகள் வழங்கவுள்ளார்.

(செ)

# பயண அனுமதி வழங்கப் பட்டோர் விபரம்

மாசி மாதம் 22ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றது

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 132417 ஏ | 132417 பி |
| 179847 ஏ | 180311 பி |
| 180311 சி | 181311 டி |
| 180311 ஈ | 180311எப் |
| 180311 ஜி | 181763 ஏ |
| 181763 பி | 184394 ஏ |
| 184639 ஏ | 184639 பி |
| 184639 சி | 184737 ஏ |
| 184806 ஏ | 184806 பி |
| 184808 ஏ | 184812 ஏ |
| 184812 பி | 185891 ஏ |
| 185936 ஏ | 185958 ஏ |
| 185959 ஏ | 185959 பி |
| 185959 சி | 185968 ஏ |
| 185968 ஏ | 186055 ஏ |
| 186057 ஏ | 186057 பி |
| 186057 சி | 186068 ஏ |
| 186101 ஏ | 186101 பி |
| 186103 ஏ | 186113 ஏ |
| 186130 ஏ | 186139 ஏ |
| 186139 பி | 186139 சி |
| 186166 ஏ | 186173 ஏ |
| 186178 ஏ | 186285 ஏ |
| 186320 ஏ | 186933 ஏ |
| 188017 ஏ | 188729 ஏ |
| 188729 பி | 188824 ஏ |
| 188851 ஏ | 188863 ஏ |
| 188864 ஏ | 188865 ஏ |
| 188905 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 166200 ஏ | 166200 பி |
| 185973 ஏ | 185973 பி |
| 185973 சி | 186020 ஏ |
| 186172 ஏ | |

## பொதுக் கூட்டம்

(கல்வயல்)

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப்பாடசாலையின் அபிவிருத்திச்சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 30மணிக்கு பாடசாலையின் அதிபரும் பாடசாலை அபிவிருத்திச் சபையின் தலைவருமான வே ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ-111)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
16 | 05 | 1936



மறைவு
03 | 04 | 2000

**திருமதி கனகம்மா துரைராசா**

அம்மா கனகம்மா ஆருயிர் நீயம்மா
சொல்லாமல் கொள்ளாமல் சென்றதேனம்மா?

''கனகம்மா இல்லம்''
கரவெட்டி.

குடும்பத்தினர்.

(2652)

## அரச எதிர்ப்பாளர்கள் 100 பேர் கைதாகினர்

(இஸ்லாமபாத்)
அரசிற் கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் நூற்றுக்கணக்கானோரை பாகிஸ்தான் அரச படைகள் கைது செய்துள்ளனர்.

வரும் வெள்ளிக்கிழமை மநடாத்தத் திட்டமிடப்பட்டுள்ள அரசிற்கெதிரான ஆர்ப்பாட்டத்தினை தடுத்து நிறுத்தும் நோக்கிலேயே இக்கைதுகள் இடம்பெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது. (உ-7)

## சிங்கப்பூரில் விரைவில் பிரதமர் தேர்தல்

(சிங்கப்பூர்)
இந்த ஆண்டின் முடிவுக்குள்ளோ அல்லது அடுத்த ஆண்டின் தொடக்கத்திலோ நாட்டில் தேர்தல் நடைபெறும் என்று சிங்கப்பூர் பிரதமர் கோசோதொங் தெரிவித்துள்ளார்.

கங்ஹேறிய நாட்டிற்கு சுற்றுலா சென்றிருக்கும் கோசோதொங் வெளிநாட்டு பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்கையில், 2001 ஆம் ஆண்டிற்குள் புதிய பிரதமரைச் சிங்கப்பூரில் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தார். (து)

## ரஷ்யத் தயாரிப்பு உலங்கு வானூர்திகள் ஒரே தினத்தில் விபத்து

(மொஸ்கோ)
ரஷ்யாவினால் வடிவமைக்கப்பட்ட இரு உலங்குவானூர்திகள் ஒரே தினத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளன.

கடந்த திங்களன்று உக்ரைனிலும் ரஷ்யாவிலும் இவை விபத்துக்குள்ளாகியுள்ளன.

இச்சம்பவங்களின்போது 11 பேர் பலியாகியுள்ளனர். (உ-7)

## கடவுச் சீட்டின்றி பயணம் செய்யலாம் புதிய திட்டம் தயார்

(ஜகார்த்தா)
ஆசியான் உறுப்பு நாடுகளைச் சேர்ந்தவர்கள் கடவுச் சீட்டு இல்லாமல் தங்கள் நாடுகளுக்குள் பயணம் செய்வதற்கான முறை கொண்டு வரப்பட இருக்கிறது.

அண்மையில் ஆசியான் நாட்டு உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட மகாநாட்டில் இது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

அடுத்து நடைபெற இருக்கும் அமைச்சுகள் கலந்து கொள்ளும் கூட்டத்தில் கடவுச்சீட்டுஇல்லாமல் ஆசியான் நாடுகளுக்குப் பயணம் செய்யும் முறை கொண்டுவரப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## அல்பேனிய கெரில்லாக்களை தாக்குவதற்கு மஸடோனிய படைகள் விரைவு

(டெட்டோவோ)
அல்பேனிய கொரில்லாக்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு மஸடோனியாவின் இராணுவம் டெட்டோவோவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

டெட்டோவோ நகருக்கு அருகில் உள்ள குன்றுகளில் இருந்தே கெரில்லாக்கள் தாக்குதல் நடத்துவதாகவும்,

அதனால் அப்பகுதியை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தப் போவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிததுள்ளன (உ)

## அமைச்சர் ஜஸ்வந்சிங் அமெரிக்கா பயணம்

(புதுடில்லி)
இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் வரும் மாதம் அமெரிக்கா செல்லவுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜஸ்வந் சிங்கின் இவ் விஜயத்தின்போது, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவுலுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் இதன்போது இந்தியப் பாதுகாப்பு உட்பட பல விடயங்கள் குறித்து பேசப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜஸ்வந்சிங் தற்போது பாதுகாப்பு அமைச்சர் பொறுப்புக்களையும் கையேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## சிங்கப்பூர் - இந்திய கடற்படையினர் இணைந்து நீர்மூழ்கிப்பயிற்சி

(சென்னை)
சிங்கப்பூர்-இந்தியகடற்படையினர் நீர்மூழ்கிப் பயிற்சியில் கூட்டாக ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்தியாவின் கொச்சி கடற்பகுதியில் தொடர்ந்து பல நாட்களாக இரு நாட்டுப் படையினரும் நீர்மூழ்கிப் பயிற்சியில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இருநாட்டுக் கூட்டுப்பயிற்சியின் போது நவீன நீர்மூழ்கிகள் பயன்படுத்தப்படுவதுடன், இருநாட்டுப் படையினர்களுக்கிடையில் அறிவுபூர்வ நவீன உத்திகள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

ஏற்கனவே, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பும் கூட்டுக் கடற்படைப் பயிற்சியில் இரு தரப்பும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (து)

## லதாமங்கேஷ்கருக்கு பாரதரத்னா விருது

[புதுடில்லி]
ஹிந்தி திரைப்படப்பின்னணிப் பாடகி லதாமங்கேஷ்கருக்கும், இசையாளர் பிஸ்மில்லாக் கானுக்கும் இந்தியாவின் மிக உயர்ந்த விருதான பாரதரத்னா விருது வழங்கப்பட்டுள்ளது.

அறுபது ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ள லதாமங்கேஷ்கருக்கு இவ்விருது வழங்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானதென இசை உலக ஈடுபாடுடையோர் கருத்து தெரிவித்துள்ளன. [து]

## உலக தரிசனம்

### 10பேர் பலி

[பிறேசிலியா]
பிறேசிலின் எண்ணெய் அகழ்வு நிலையத்தைத் தாங்கி நிற்கும் தாங்கியொன்று கடலில் மூழ்கியதில் 10 பேர் பலியாகியுள்ளனர்.

இத்தாங்கியில் ஏற்பட்ட சிறிய வெடிப்பு காரணத்தினாலேயேஇச் சம்பவம்நேர்ந்துள்ளது. (உ 7)

## 84 வயதிலும் அப்பாவாக விரும்பும் அவுஸ்திரேலியர்

[சிட்னி]
84 வயதிலும் அப்பாவாக வேண்டுமென்று அடம்பிடித்த அவுஸ்திரேலிய வாசியான ஒருவருக்கு குளோனிங் முறை மூலம் பிள்ளையொன்றை பெற்றுக் கொடுக்கலாமா என்று பரபரப்பான விவாதங்கள் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்று வருகின்றன.

84 வயதுடைய ஹன்ஸ் போர்ட் - மில்லர் என்னும் நபருக்கே இவ் ஆசை எழுந்துள்ளது.

தான் குளோனிங் முறை மூலம் பிள்ளையைப் பெறுவதற்கு அவுஸ்திரேலிய அரசு தனக்கு அனுமதி தரவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். [உ-9]

## செய்திப்பரல்

★ பிரான்ஸ் துறைமுகம் ஒன்றில் இரசாயனப் பொருட்களை ஏற்றி வந்த கப்பலொன்று மூழ்கத் தொடங்கியுள்ளது.

★ ஆசியாவில் ஊழல் மிகுந்த நாடுகளில் வியட்னாமும் இந்தோனேசியாவும் முன்னணி வகிக்கின்றன.

★ அப்கானிஸ்தானில் புத்தர் சிலைகள உடைக்கப் பட்டதற்குப் பரிகாரமாக முதற் கட்டம் 12 பசுக்கள பலியிடப் பட்டுள்ளன.

★ இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா பூரண ஆதரவு வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ஐ.நா சபையின் பொதுச் செயலர் கோபி அனான் இந்தியா செல்லவுள்ளார்.

## அணுவாயுதத் தடைச் சட்டத்தில் பாக். கைச்சாத்திடும்

[இஸ்லாமபாத்]
அணுவாயுததடைச் சட்டத்தில் பாகிஸ்தான் கைச்சாத்திட இருப்பதாக அந்நாட்டு அதிபர் ஜெனரல் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இந்தியா இந்த ஒப்பந்தத்தில் முதலில் கைச்சாத்திட்டால் மட்டுமே தாம் கைச்சாத்திடமுடியும் என்று முன்பு பாகிஸ்தான் கூறிவந்தமைகுறிப்பிடத்தக்கது.

வாஷிங்டன் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறுமுஷாரப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தொடர்கையில். பாகிஸ்தானின் கடன்தவணையை நீடிப்பதற்கும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று தெரிவித்துள்ளார். (து)


15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நீங்காத நினைவில்

மார்ச்- 23



தோற்றம்: 15 ■ 04 ■ 1927

மறைவு: 23 ■ 03 ■ 1986

மக்கள் எழுத்தாளர்

கே. டானியல்

சமூகத்தின் மாகொடிய நோயான
தீண்டாமைக் கெதிராக
தன் இலக்கியப் படைப்புக்களையும்,
வாழ்வையும் அர்ப்பணித்தவர்

என்றும் நீங்காத நினைவுகளில்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

76/2 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(2655)


## இலங்கைப் படையினர் மீனவர் மீது தாக்குவதை நிறுத்த இந்திய அரசு முயற்சிக்கவில்லை

(புதுடில்லி)
இலங்கைப் படையினர் இந்திய மீனவர் மீது தாக்குதல் நடத்துவதைத் தடுப்பதற்கு இந்திய அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்க வில்லையென அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, வேதாரணியம் பகுதி மீனவர்கள் மீன் பிடித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இலங்கைப்படையினர் றொக்கெட்லோஞ்சர்களால் தாக்கியுள்ளனர்.

இதனால் மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இதனை மத்திய அரசு கண்டும் காணாதது போல உள்ளது என தெரிவித்துள்ளார்:

இந்திய மீனவர்கள் பாதுகாப்புடன் மீன்பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இலங்கை இராணுவத்தினரால் அவர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை நீக்க வேண்டும் எனவும் ஜெயலலிதா மத்திய அரசை கேட்டுள்ளார். (உ-9)

கொலை மேற் கொண்டாரிற் கொடிதே அலைமேற் -கொண்டு அல்லவை செய்தொழுகும் வேந்து

குறள்

# வலம்புரி

## பிரிட்டனின் பதிலென்ன?

முல்லைத்தீவுப் பகுதியில் கிபிர் மிக் விமானங்கள் நடத்திய தாக்குதலில் நான்கு பொதுமக்கள் உடல்சிதறிப் பலியாகியுள்ளதுடன், 12பேர் படுகாயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் தாக்குதல் சம்பவம் நடந்த போது முல்லைத்தீவுக் கடற் கரையோரப் பகுதியிலமைந்துள்ள குடிசைகள் மீது விமானக்குண்டுத் தாக்குதல் நடத்தியமை எந்த வகையில் நியாயமானதென்பதை உலக நாடுகளே தீர்மானிக்க வேண்டும். காலாகாலமாகச் சிங்களப் பேரினவாதத்தால் தமிழினம் நசுக்கப்பட்டுஅகதிகளாக்கப்பட்ட வரலாறு மலிந்து போயிருக்கும் இலங்கைத் தீவில் தமிழர்களின் உரிமைக்காகப் போரிடும் தமிழீழவிடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாகக் கருதி தடைசெய்துள்ள பிரிட்டன் அரசு முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல் குறித்து மௌனமாக இருப்பது பிரிட்டனும் இனம் சார்ந்து செயற்படுகிறதென்பதையேதெளிவுபடுத்துகிறது.


விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதஅமைப்பென பிரிட்டன் கூறுமாயின் பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது கிபிர் மிக் விமானங்கள் குண்டு போட்டு அப்பாவிப்பொதுமக்களைக் கொல்லும் கொடூரத்தைப் பிரிட்டன் எவ்வாறுஅழைக்கப்போகிறது அல்லது இலங்கை அரசிற்கு என்ன தண்டனை கொடுக்கப்போகிறது.இரண்டுபேர்சண்டையிடும் போது பொதுவான ஒருவர்சண்டையில்ஈடுபடுவோரில் ஒருவரை மட்டும் பிடிக்க மற்றவர் தாக்குவதுபோல் புலிகள் மீதான தடை அமைந்துவிடக் கூடாது என்பதே பலரின் கருத்தாகும்.

அதேபோன்று அண்மையில்யாழ்ப்பாணம் விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர்அஸ்லி வில்ஸ் தமிழர்களின் வரலாற்றுப்புலம் தெரியாது எழுந்தமானமாகத் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் மக்களைப் புண்படுத்தியிருக்கும் இவ்வேளையில் விமானப்படையின்குண்டு வீச்சினால் நான்கு பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர் என்ற செய்தி எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்துமென்பதை அமெரிக்காவும் காலம் கடந்தென்றாலும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

வெள்ளி நற்சிந்தனை

# நஞ்சணி கண்டத்து நாதனை நாள்தோறும்

# அஞ்சியேனும் அடிதொழுவார்களுக்கின்பமே



உலகத்தில் சுவைகள் அனந்தம் மனம் பக்குவத்திற்கும் பழக்கத்திற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும், புலன்களின் வலிவு, மெலிவுற்கும், பிரார்த்த கன்மங்களுக்கும், உடல், மன வளர்ச்சிக்கும் ஏற்பச் சுவைகளில் விருப்பு வெறுப்பு அதிகரிக்கும். ஒருவருக்குக் கண்ணீர் வரக் காரச் சுவை பிடிக்கும்: வேறொருவருக்கு இனிப்புப் பண்டங்களில் விருப்பு அதிகரிக்கும் ஒருவருக்குக் கர்நாடக சங்கீதம் இனிமையைத் தர அதே இசை இன்னொருவருக்கு செவியைக் கசக்க வைக்கும்:

### சுவை எது

ஒருவருக்குத் தேவார திருவாசகத் திருமுறைப் பாடல்கள் தித்திப்பைத்தரும்தேனாகும். பிறிதொரு சாரருக்கு அதுவே வாயில் வேப்பெண்ணெய் ஊற்றியது போலக் கசக்கும்:

பற்றுக்களை எல்லாம்உதறி தள்ளிப் பரமனுடைய தாதங்களில் பக்தி வைப்பவருக்கு உலகத்தில் ஏனைய எதுவும் இன்பம் தராது: 'பத்தராய்ப் பணிவார்கள், பாடுவார், சித்தத்தைச்சிவன் பாலே வைத்தார்கள்.' என்று பக்திச் சுவையாளரைப் பகுத்துப் பாடிப் பரவுவார் சுந்தரமூர்த்தி நாயனார்.

பக்து ஏதும் இல்லாமல் பரமனை பற்றிப் பத்திச் சுவையில் திளைப்பவர்களுக்கும் அச்சம் ஏற்படுவதுண்டு, பத்திச் சுவையிடையே பரிணமிக்கும் அச்சச் சுவையின் இரசனையும் வேறுபடுவதுஉண்டு. 'அச்சம்' என்று சொல்லும் வார்த்தைக்கு நேரான பொருள் பயம். அந்தப் பயத்தினால் ஏற்படும் சுவை அனுபவமும் ஒன்றிற்கு ஒன்று முரணாக அமையும் விசித்திரம் சுவைமிக்கது.

### அஞ்சியேனும் அடி தொழு

திருக்கோவில் வழிபாட்டுத் தொடக்க நிலை அச்சத்தினால் ஏற்படுவதும் உண்டு.

சிவ. சண்முகவடிவேல்

இறைவன் மாட்டு வைத்த அன்பினால்வருவதும் உண்டு. எதுவாக இருந்தாலும் அஞ்சியானாலும் சரி அன்புபட்டாயினும் சரி ஆலயத்தில்சென்று வழிபாட்டை ஆரம்பியுங்கள் என்று அப்பரடிகள் அருளுரை பகர்வார்.

ஆரம்பத்தில் அச்சத்தினால் ஏற்படும் ஆலய தரிசனம் பின்னர் அன்பாக மாறிப் பத்தியாக உருவெடுக்கும். மணிவாசகர் தேனாகப் பொழிவார், 'வம்பனாய்த் திரிவேனை, வாவென்று வல்வினை மாய்த்தார்சிவபிரான். இதனால் பின்னர்இறைவனை அன்பமே, என்னுடைய அன்பே, என்று பக்திச்சுவையில்பரவசப்படுகின்றார்.

ஞான ஆர் அமுது உண்ட ஞானசம்பந்தரே, பக்திச் சுவை வாய்மடுத்தும் அச்சச் சுவையின் அனுபவத்தை அறியத் தருகின்றார்.

'ஐயனேயஞ்ச லென்றருள் செய்யெனை, அத்தனே சொக்கனே... அட்டமூர்த்தியனே... அண்ணலே... ஆலவாய் அங்கணா ஆத்தனே அண்டனே... அஞ்சல் என்று அருள்செய் எனை'... என்று தமது பத்திச் சுவையிடையே பரிணமித்த அச்சச்சுவையை இறைவனிடத்தில் விண்ணப்பிக்கின்றார்.

### அஞ்சாமை

திருநாவுக்கரசு நாயனார் சமணர் செய்த சூழ்ச்சியினால் ஏழு நாட்கள் வெய்ய நீற்றறையில் விளங்கினார். பக்திச் சுவைப் பரவசத்தால் நாவரசர் அச்சச்சுவையை அறிந்தாரில்லை. உருகுபெருந் தழல் வெம்மை நீற்றறையில், ஆனந்த வெள்ளத்தினிடை மூழ்கி அம்பலவர் தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவு எய்தி இருந்தார். பக்திச் சுவை அரச ஆணையை மறுத்துப் பாட வைத்தது, 'நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம் நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்' பார்த்திபன் ஏவிவிட்ட பட்டத்து யானை பதசளி போடு எதிர்வரக் கண்டு ஏங்கினார் அல்லர். 'சிவபிரானுடைய உறவினர் நாம் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை' என்று மண் உலகம் உய்ய மகிழ்ந்து பாடுகின்றார் பக்திச்சுவையுள் மலர்ந்த அச்சச்சுவை இது ஒரு வகை.

பக்தியாய்ப் பரவுவார் தமக்குப் பரகதி கொடுத்தருளும் சித்தன் மீது பக்தி செய்யும் திருவாதவூரருக்குத் தோன்றிய அச்சச்சுவை அதிசயிக்க வைப்பது.

### அஞ்ச வேண்டியவை

இந்த உலகத்தவர் அஞ்சப்பட வேண்டியதாக உள்ளன எவையோ அவற்றைக் கண்டு அடிகளார் அஞ்சவில்லை.

'அரவிற்கு' அஞ்சேன். பொய்யர் பேசும் மெய்க்கு அஞ்சேன்வேலிக்கு அஞ்சேன். பெண்களுடைய கடைக் கண்ணிற்கு அஞ்சேன், நோய்க்கு அஞ்சேன்,. பிறப்பிற்கு அஞ்சேன், இறப்பிற்கு அஞ்சேன், யானைக்கு அஞ்சேன், பஞ்சபூதங்களுக்கு அஞ்சேன்.

'சிவபெருமானைக் கும்பிடாமல், நெற்றியில் வெண்ணீறு அணியமல், பிறதெய்வம் வணங்கிச் சிவபெருமானிடத்தில் அன்பில்லாதவரைக் கண்டால் நான் அஞ்சுகின்றேன். அஞ்சுகின்றேன்- அஞ்சுகின்றேன் என்பது அச்சப்பத்து அஞ்சியாகிலும் அன்புபட்டாகிலும் ஆரப்பிக்கும் ஆலய வழிபாடு எந்நாளிலும் இன்பமே இன்றித் துன்பமில்லை. பக்தி வழிபாடு பரவுக பார் எங்கும்.

|வடக்கின் 95 வது போர் இன்றும் - நாளையும்|

# பரியோவான் அணியும் மத்தியகல்லூரி அணியும்

வடக்கின் மாபெரும்போர் என்றுவர்ணிக்கப்படும்யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி அணிக்கும்: யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிஅணிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டியின்95 ஆவது போர் இன்றும், நாளையும் யாழ்ப்பாண மத்திய கல்லூரிமைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் பங்கு கொள்ளும் இரு அணி வீரர்களினது விபரம் வருமாறு.

### பரியோவான் கல்லூரி அணி வீரர்கள் விபரம்

**★ பி. பார்த்தீபன்**

தலைவர் 3வது வருடமாக அணியில் ஆடும் இவர் ஒரு வலது கைத்துடுப்பாட்டவீரர் அத்துடன் இலக்குக் காப்பாளரும் ஆவார்.

**★ ரி. ராகுலன்**

உதவி அணித்தலைவர் 4 வது வருடமாக அணியில் இடம் பெறும் இவர் வலது கை ஆரம்ப பந்து வீச்சாளர் அத்துடன் இடது கை துடுப்பாட்ட வீரரான இவர் எந்த நிலையிலும்பந்து தடுப்பாளராக செயற்படக் கூடியவர்.

**★ பி லவேந்திரா**

3 வது வருடமாக அணியில் இருக்கும் இவர் ஒரு சிறந்த நிதானமான அடித்தாடக் கூடிய இடது கைதுடுப்பாட்ட வீரர். அத்துடன் இவர் ஒரு இடது கைச்சுழல் பந்துவீச்சாளரும் ஆவார்.

**★ வி. விஸ்னுவர்த்தன்**

3 வது வருடமாக அணியில் இருக்கும் இவர் ஒ[illegible] இடதுகை துடுப்பாட்ட வீரர் அத்துடன் சென்ற வருடம் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**★ சி. அகிலன்**

3 வது வருடமாக அணியில் ஆடிக்கொண்டு இருக்கும் வலது கை வேகப்பந்து வீச்சாளர் அத்துடன் நம்பிக்கைக்குரிய வலது கை துடுப்பாட்ட வீரரும் ஆவார்.

**★ எஸ். ராஜாராம்**

2 வது வருடமாக அணியில் இடம்பெறும் இவர் வலதுகை ஆரம்பத்துடுப்பாட்ட வீரன் அத்துடன் வலது கைநடுத்தர வேகப்பந்து வீச்சாளரும் ஆவார்.

**★ எ. ஜீவதர்சன்**

2 வதுவருட அணியில்இடம்பெறும் இவர்நம்பிக்கைக்குரிய வலது கைதுடுப்பாட்ட வீரரும் ஆவார்.

**★ பி. பிரியந்தா**

2வது அணியில்வருடம்இடம் பெறும் இவர் வலது கைநடுத்தர வேகப்பந்து வீச்சாளர் வலது கைதுடுப்பாட்ட வீரரான இவர் பந்து தடுப்பதில் சாதுரியமானவர்.

**★ வி. குமணன்**

புதுமுகம் அடித்தாடக் கூடிய வலதுகை துடுப்பாட்ட வீரர். அத்துடன் வலதுகை சுழல் பந்து வீச்சாளர்ஆவார்.

**★ இ. எஸ். வில்சன்**

புதுமுகம் வலதுகை ஆரம்ப துடுப்பாட்ட வீரரான இவர் தேவை ஏற்படும்போது விக்கெட் காப்பாளராகவும் கடமை ஆற்றக்கூடியவர்.

**★ எ. தனஞ்சேயன்**

புதுமுகம் வலதுகை துடுப்பாட்ட வீரர். அத்துடன் வலதுகை சுழல்பந்து வீச்சாளரும். கிட்டநின்று பந்து தடுக்க கூடியவராவார்.

### கப்டன் டி.ஏ. எம் குணசிங்கம்

**★ எஸ். கிருஷ்ணகுமார்**

புதுமுகம் அணியின் குழந்தை என்று வர்ணிக்கப்படும் இவர் வலதுகை துடுப்பாட்ட வீரரும், வலதுகை நடுத்தர வேகப்பந்து வீச்சாளரும் ஆவார்.

**★ ரி. சி. அன்ரு**

புதுமுகம் வலதுகை நடுத்தர வேகப்பந்து வீச்சாளர். அத்துடன் வலதுகை துடுப்பாட்ட வீரரும் ஆன இவர் தொலைவில் நின்று பந்தை தடுப்பதில் கெட்டிக்காரர்.

**★ ஆர். சஞ்சித்**

2 ஆவது வருடம் வலதுகை ஒவ் (off) சுழல்பந்து வீச்சாளர்.

### யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்கள் விபரம்

→ 3ஆம் பக்கம் பார்க்க

## தவக்காலச் சிந்தனை - 24



கடவுளின் மேல் நம்பிக்கை கொண்டுள்ளோர் அவரை அறிந்து கொள்கின்றனர். ஆண்டவர் பலிகளை விட தூய உள்ளத்தையே விரும்புகின்றார். இயேசு வாழ்ந்த காலத்தில் பாவத்திற்காக பலி செலுத்தும் பழக்கம் இருந்தது: அதிலும் எரிபலி சிறந்த பலியாக கருதப்பட்டது: எத்தகைய பாவமும் இதன் மூலம் நீங்கி விடும் என்று மக்கள் நம்பி வந்தனர். ஆகவே அவர்கள் மனிதத்தை விட, மனித மாண்பை விட, அன்பை விட, ஆதரவை விட பலிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தனர்: ஆனால் இயேசு மறைநூல் அறிஞர் வழியாக மனிதனுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றார். மனிதனை அன்பு செய்வது இறைவனை அன்பு செய்வதற்கு சமம். இதனால் தான் அன்னை திரேசா போன்றோர் நம்மை விட உயர்ந்து நிற்கின்றனர். ஆனால் நாம் வாய்ச்சொல் வீரர்களாக பிறருக்குப் போதிக்கின்றோம்: ஆனால் வாழ்க்கையி கடைப்பிடிப்பது இல்லை. இன்றைய கணிப்பொறி யுகத்தில் நாம் மனிதனை விட பணம், தவி, பட்டம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். இந்நிலை நம்மில் மாற இறைவனை நாடிச் செல்வோம்

காவலன்

# பிள்ளைகளை போருக்கு அனுப்பிய தாய்மாருக்கு "லங்காமாதா" விருது

## 2500 பேருக்கு ஜனாதிபதி வழங்குவார்

தமது பிள்ளைகளைபோர்க்களத்திற்கு அனுப்பி படையினரின் ஆட்பல ஒருமைப்பாட்டை பேணிப்பாதுகாக்க முன்வந்த தாய்மாருக்கு 'வீர லங்கா மாதா விருது' வழங்கி கௌரவிக்கப்படவுள்ள னர்.

நாட்டைக் காக்க பிள்ளைகளைப் போர்க்களத்துக்கு அனுப்பி படையினரின் ஆட்புல ஒருமைப்பாட்டை ஏற்படுத்திய அன்னையர் 2500 பேருக்கு துணிச்சல் தியாகம் என்பவற்றை கௌரவித்து மேற்படி விருது ஜனாதிபதியால் வழங்கப்படவுள்ளது.

இவ் விருது வழங்கும் வைபவம் நாளை மறுதினம் கொழும்பு குதிரைப் பந்தய ஓட்டத்திடலில் நடைபெறும்; (இ)

அற்புதமான வடிவமைப்புக்களைக் கொண்ட அழகிய தங்க நகைகளுக்கு நங்கையர் நாடும் இடம்

**நியூ ராதிகாஸ் நகை மாளிகை**

189. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(கி/ 1622)

மங்கையர்மனம்மயங்கும் மங்காத அசல் 22கரட் தங்க நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம் அதுதான்

**மகாநதி ஜுவல்லறி**

72A, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

(கி/1623)

### கும்பாபிஷேகம்

(மானிப்பய்)

யாழ். வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் கோவில் நூதனப் பிரதிஷ்டா மகா குப்பாபிஷேகம் எதிர் வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேக பிரதிஷ்டா குரு பிரம்ம ஸ்ரீ நடராசக் குருக்கள் கிரியைகளை நடாத்திவைப்பார். (செ-120

### யாழ் இந்துவில் வணிக தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக்கல்லூரியின் வணிகதினம் இன்று கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் காலை 9-30 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி கலந்து கொள்வார்.

''வரவு'' எனும் வணிக மலரும் வெளியிடப்படும்.

[இ-106]

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை**

**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

**அறிவித்தல்**

வெளிநிலை தேர்வுநாடிகளின் பதவேடுகள்

கலை முதற் தேர்வு கல்வியாண்டு 1999/2000

வணிக முதற் தேர்வு கல்வியாண்டு 1999 2000

கலை மாணி பகுதி- I கல்வியாண்டு 1999/ 2000

மேற்படி கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வுநாடிகளாக பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய பதிவேட்டினை 26 03.2001 திங்கள் கிழமை முதல் வெளிவாரிப பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**குறிப்பு** : பிறப்புச்சான்றிழினதும் கல்விச்சான்றிழினதும் [க.பொ.த உயர் தரம்] மூலப்பிரதிகளை தயவு செய்து கொண்டுவரவும்.

-பதிவாளர்

[கி/1634]

### யுத்தநிறுத்தத்தை ---

குண்டு வீச்சுக்கள், ஏவுகணைத் தாக்குதல், கிளைமோர்த் தாக்குதல், கடற்படைத் தாக்குதல்கள் இப்படியாக கடந்த கிறிஸ்மஸ் பண்டிகையிலிருந்து இதுவரை நடந்த போர்களினால் 133 போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர்.

#### வடக்கு, கிழக்கு, தென் பகுதியில் தாக்குதல் நடத்தவில்லை

இப்படியானஆத்திரமூட்டும் நடவடிக்கையின்போதும்நாம் தற்காப்புநிலைப்பாட்டையே தழுவிஇருக்கின்றோம்.இந்தப் போர்தணிந்த கால கட்டத்தின் போதுவடகிழக்கு போர் முனைகளிலோ, அன்றி கொழும்புமற்றும்தென்மாகாணங்களிலோ எந்த விதமான போர் நடவடிக்கை களிலும், வன்முறை தாக்குதல்களிலும் நாம் ஈடுபட வில்லை என்பதனை ஸ்ரீலங்கா அரசு நன்கறியும்.

நாம் ஒழுங்காகவும்,கட்டுப்பாடாகவும் யுத்த நிறுத்தத்தைப் பேணிவிடுவதன் காரணமாகவே தலைநகரிலும் தென்இலங்கையிலும் அமைதிநிலையும், ஸ்திர நிலையும்நிலவிவருகிறது ஆயினும்சந்திரிக்காவின் அரசு எமதுநல்லெண்ண முயற்சியை உதாசீனம் செய்து அதனை ஒருஅபத்த நாடகமாகக் கேலிசெய்து வருவது எமக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கிறது.

#### நவீன யுத்தவிமானங்கள் மூலம் தாக்குதல் அதிகரிப்பு

இலங்கைஅரசு இஸ்ரேலிடம் இருந்தும் ரஷ்யாவிடம்இருந்தும் விமானப்படைக்குப் பெறப்பட்ட நவீனரககுப்பசொனிக் குண்டுவீச்சுவிமானமூலம் முல்லைத்தீவு,மன்னார் மாவட்டங்களிலுள்ள கிராமங்கள் மீது இடைவிடாது குண்டுத்தாக்குதல்களைநடாத்தி வருகிறது இதனால் அப்பாவித்தமிழ் மீனவர்கள் மத்தியில்பெரும் பீதியையும் உயிர்ச்சேதத்தையும் ஏற்படுத்திவருவதுடன் அவர்களின்குடியிருப்புக்களும் மீன்பிடிவள்ளங்களும் நாசமாக்கப்பட்டு வருகின்றன;

நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு கரையோரக் கிராமங்கள் மீதுஅரசுமேற்கொண்ட கொடூரமான குண்டுத் தாக்குதல்களினால் 4அப்பாவித் தமிழ்மக்கள் உடல்சிதறிப் பலியாகியதுடன்15பேர்வரைகாயம்அடைந்துஉள்ளனர் இப்படியாக தமிழ்மக்கள் மீதுகண்மூடித்தனமாகமேற்கொள்ளப்பட்டு வரும் குண்டுத்தாக்குதலை கண்டிக்கிறோம்.

#### தூதுவர் மூலம் எதிர்ப்பை தெரிவித்துள்ளோம்

இக்கண்டனத்தை ஜனாதிபதி சந்திரிகாவிற்கு நோர்வே தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் மூலம் பிரான்சில் வைத்து தெரிவித்துள்ளோம்.

#### தாக்குதலைத் தீவிரமாக்கினால் போர்நிறுத்தம் ரத்தாகும்

போர் நிறுத்தத்தை மேற்கொள்ளமறுத்து விமானத் தாக்குதல்களையும், இராணுவத் தாக்குதல்களையும் அரசு தீவிரப்படுத்தினால் நாம் எமது ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை ரத்துச்செய்ய நேரிடும் என சிறிலங்காஅரசுக்குஎச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து சர்வதேச சமூகம் குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன் இந்தியா,மற்றும் ஐரோப்பிய நாடுகள் கடைப்பிடித்து வரும் வெளியுறவுக் கொள்கைகளில் எமக்கு ஆழமான ஐயப்பாடு உண்டு.

இந்நாடுகள் ஒருபுறம் நிதி உதவியும், ஆயுத உதவியும் வழங்கி அரசுக்கு ஆதரவு தெரிவித்தவாறு மறுபுறம் தமிழ் மக்களின் போராட்ட வடிவத்துக்கு சர்வதேச பயங்கர வாதம் எனக் கண்டித்து கொச்சைப்படுத்தும் வெளியுறவுக் கொள்கையால் இலங்கையில் இன ஐக்கியமும் அமைதியும் ஏற்படப் போவதில்லை மா றாகசிங்கள இனவாத அரசினருக்கும் போருக்கான இராணுவஅணுகுமுறையை ஊக்குவிப்பதாகவே அமைகிறது தென்றும் விடுதலைப் புலிகளின்யுத்த நிறுத்த அறிவிப்பின் அதிகாரபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நான்காவது தடவையாக விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த நீடிப்பை அறிவிப்பார்கள் என வலம்புரி ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. (வ)

### வெடிபொருள் மீட்பு

(கொழும்பு)

உடப்புக் கரையோரப் பகுதியில் மறைத்து வைக்கப் பட்டிருந்த வெடிபொருள் அடங்கிய பொதியொன்றை சிலாபப் பொலிசார் கண்டெடுத்துள்ளனர்.

சிலாபப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியப் புலனாய்வுத் தகவலை அடுத்தே இப்பொதி கண்டெடுக்கப்பட்டதாகவும் இப்பொதியில் அதி சக்தி வாய்ந்த வெடி பொருள்களும், கருவிகளும் இருந்ததாகவும் சிலாபப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (ந-4)

## க.பொ.த[சா/த]பரீட்சை முன்னணிப்பெறுபேறுகள்

[யாழ்ப்பாணம்]

கடந்தவருடம் நடைபெற்ற கல்விப்பொதுத்தராதரசாதாரணதரபரீட்சை பெறுபேறுகள் அடிப்படையில்யாழ் முன்னணிப்பாடசாலைகள்சிலவற்றின் பெறுபேறுகள் வருமாறு

யாழ் வேம்படி உயர்தர பெண்கள் கல்லூரி 10பாடங்களிலும்அதிவிசேடசித்திபெற்றோர்

கௌசிகா மகாதேவா,சுகந்திகா சண்முகதாஸ், யாழினி செல்வலிங்கம், ஜெயந்தினி மகேந்திரன், ஜனோஜினிதிருலோகநாதன்,ஜசித்தா இராமச்சந்திரன், நிருஷா திரிபுரபவன், சரண்ஜா நரேந்திரன்

- ★ 12 மாணவிகள் - 9டி
- ★ 24 மாணவிகள் - 8டி
- ★ 17 மாணவிகள் - 7டி
- ★ 11 மாணவிகள் - 6டி

யாழ் பரியோவான் கல்லூரி 10 பாடங்களில் அதிவிசேட சித்திபெற்றோர்:

விமல காந்தன் தனுஷன், சத்தியமூர்த்தி சத்தியரூபன், சிவராஜ் கிரிவக்ஷன், தவபாலன் பவானந், இராமதாசன் தேவமாறன்.

- ★ 05மாணவர்கள் - 9டி
- ★ 06 மாணவர்கள் - 8டி
- ★ 05 மாணவர்கள் - 7டி

யாழ் இந்துக்கல்லூரி 10 பாடங்களில் அதிவிசேட சித்திபெற்றோர்.

எஸ். பிரசாந்,ஜே.சிவராம சர்மா, ஜீ. சுதர்சன், எஸ். உமைபாலன்.

- ★ 07 மாணவர்கள் 9 டி
- ★ 14 மாணவர்கள் 8 டி

சாவகச்சேரி இந்துக் கல்லூரி 10 பாடங்களில் அதிவிசேடசித்தி பெற்றோர்;

எஸ். ஐங்கரன், கே.ஜனார்த்தன்;

- ★ 02 மாணவர்கள் - 9 டி
- ★ 01 மாணவி - 8 டி
- ★ 04 மாணவர்கள் - 7 டி

### புலிகளின் ---

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

யுத்த நிறுத்த அறிவிப்பிற்கு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமான சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு விடுதலைப் புலிகள் நான்காவது தடவையாக அறிவித்துள்ள யுத்தநிறுத்தம் வழி கோலும் எனவும் இது சமாதான முயற்சிகளுக்கு ஒரு சாதகமான அங்கமென்றும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் இப்போர் நிறுத்த நீடிப்பினை ஏற்கும்படி சிறிலங்கா அரசை வற்புறுத்த முடியாதென குறிப்பிட்ட எரிக்சோல் ஹெய்ம், சிறிலங்கா அரசை விரைவில்பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் முயற்சிகளைத் தான் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்;

சமாதானப் பேச்சிற்கான முன்னெடுப்புக்கள் குறித்து அவர் தெரிவிக்கையில் விடுதலைப்புலிகள் நான்குதடவை யுத்தநிறுத்த அறிவிப்பை விடுத்துள்ளனர் என்றும் தெற்குப்பகுதியில் எந்தவிதமான தாக்குதல் களையும் நடத்தவில்லை எனவும்குறிப்பிட்டுள்ளனர்;

ஸ்ரீலங்காஅரசு பேச்சுவார்த்தைக்கு தயாராகஇருப்பதாக தெரிவித்துள்ளதை அடுத்து இருதரப்பினரும் விரைவில் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவர முடியும் என்றநம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### எரிக்சோல் வருவார்

(கொழும்பு)

புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பு, ஜனாதிபதி நாடு திரும்பியமை ஆகியவற்றை அடுத்து மிகவிரைவில் நோர்வேத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் கொழும்பு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. [ந]

### மாணவி--

பாடசாலையில் மாலை நேரம்நடைபெறும் ஐந்தாம் தரபுலமைப்பரிசில் பயிற்சி வகுப்புக்களுக்கு மாணவர்களை கட்டாயம் சமூகமளிக்கும்படி உத்தரவு பிறப்பித்த அதிபர் அங்குதனது அலுவலகத்திற்கு ஒவ்வொரு மாணவியராக தனியே அழைத்து தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்;

மேற்படிசம்பவம் தொடர்பாக பெற்றோரின் முறைப்பாட்டையடுத்தே அதிபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்;

இதேவேளை மேற்படிலிலாவிநோதம்புரிந்த 49வயதான அதிபருக்கு கொழும்பு உயர்தரப்பெண்கள் பாடசாலையில் கல்விபயிலும்இருபெண்பிள்ளைகளும் ஒருஆண்மகனும் உள்ளாரென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### இராமநாதன் கல்லூரியில் ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிஉயர்தரமாணவிகளின்வருடாந்த ஒன்று கூடல் இன்று நண்பகல் 12மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்;

உயர்தர மாணவ மன்றத் தலைவிசெல்வி அமுதா கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு மேற்படி கல்லூரியின்பழையமாணவியும்,யாழ் போதனாவைத்தியசாலைப் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி (செல்வி) நவமலர் கனகரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞான சுந்தரம் வாழ்த்துரைவழங்குவார். (ந)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது]